**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**STC.No. 1269-2022**

Deposition of RW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : நன்மாறன் | Defence | : |
| Father/Husband Name | : சந்திரகாசு | Court | : |
| Village | : நன்னிலம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 38/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 30.09.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆசிரியர் வேலை செய்து வருகிறேன். ரவிராஜன் மற்றும் ஈழவளவன் இருவரும் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 05.10.2019 அன்று மாலை 05–06.00 மணியளவில் ரவிராஜன் திருமணத்திற்காக ஈழவளவனிடம் அவரது வீட்டில் உறவினர்கள் முன்னிலையில் ரவிராஜன் ஈழவளவனிடம் ரூ. 10 லட்சத்தை தாம்பாலத்தில் வைத்து கொடுத்தார். அப்போது நானும் அங்கு தான் இருந்தேன். ரவிராஜன் தனது திருமணத்தை நடத்தி தருமாறு ஈழவளவனிடம் கேட்டுக்கொண்டார். பின்னர் 10.11.2019 அன்று ரவிராஜனுக்கு வைத்திஸ்வரன் கோவிலில் ஈழவளவன் தலைமையில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு ஈழவளவனிடம் ரவிராஜன் திருமண செலவுகள் குறித்து கணக்கு கேட்டார். ஈழவளவன் சென்னையில் வந்து கணக்கு தருவதாக கூறினார். சில நாட்களுக்கு பிறகு எனது மனைவியும் மாமியாரும் ஈழவளவனுக்கும் ரவிராஜனுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக கூறினார்கள். நான் ரவிராஜனுக்கு போன் செய்து கேட்ட போது ஈழவளவன் தன்னை அடித்து விட்டு தனது வீட்டில் இருந்து சிசிடிவி கேமரா மற்றும் காசோலைகளை எடுத்து கொண்டு சென்று விட்டதாக கூறினார். ஈழவளவன் ரவிராஜனை அடித்தது சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுக்கலாம் என கூறினோம். அதற்கு ரவிராஜனின் வளர்ப்பு தாயும் ஈழவளவனின் சகோதரியுமான விஜயலெட்சுமி அவர்கள் குடும்ப பிரச்சனை என்பதால் பேசி தீர்த்துக்கொள்ளலாம். புகார்

கொடுக்கவேண்டாம் என்றும் கூறியதால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்கு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**